தினமணி

**தலையங்கம்: கட்டுப்படுமா விலைவாசி?**

First Published : 27 May 2011 02:32:34 AM IST
Last Updated : 27 May 2011 04:45:34 AM IST

விலைவாசி உயரும்போதெல்லாம் நடுத்தர வர்க்கத்தைவிட, ஏழைகளைவிட அதிகம் கவலைப்படுவது நிதி அமைச்சக அதிகாரிகளும் இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகளும்தான். அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் அவ்வளவுதானா என்று வியப்படைய வேண்டாம், அவர்களுடைய கவலை எல்லாம் அரசின் நிதிப் பற்றாக்குறை, வருவாய்ப் பற்றாக்குறை, வங்கிகளின் லாப விகிதம், வசூலாக வேண்டிய கடன் நிலுவை ஆகியவையும் பாதிக்கப்படுமே அதற்கு என்ன செய்வது என்பதுதான்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் அனைத்துமே பணப்புழக்கத்தை கட்டுப்படுத்துவதுதான் என்று சொல்லிவிடலாம். இப்படிப் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தியும் விலைவாசி குறையவில்லையே என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறது. ஆனால் அவர்களோ விடாமல் விலைவாசியைக் கட்டுப்படுத்த இந்த ஒரே ஒரு வழிதான் இருப்பதுபோல, இதே நடவடிக்கையைத் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். தப்பித்தவறி இந்த உத்தி பலித்துவிடாதா என்கிற எதிர்பார்ப்போ என்னவோ? அப்படி குறைந்துவிடும் என்று அவர்களே கூட நம்புவதாகவும் தெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்த, அவர்களால் எடுக்க முடிந்த ஒரே நடவடிக்கை அதுதான் என்பதுதான் உண்மை. மாற்று வழிகளை யோசிக்க அவர்களுக்கு நேரம் இல்லை அல்லது மனம் இல்லை - அவ்வளவுதான்.

வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி தரும் கடன் மீதும், வங்கிகளிடம் ரிசர்வ் வங்கி பெறும் கடன் மீதும் தரப்படும் வட்டி வீதம் அரை சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் எந்தப் பொருளின் விலையும் குறையாது. ஆனால் வங்கிகள் வழங்கும் வீட்டுக்கடன், மோட்டார் வாகனக் கடன், கைச் செலவுகளுக்கான கடன், இதர வகைக் கடன் ஆகியவற்றின் மீதான வட்டி வீதம் இதே அளவுக்கு உயரும்.

நடப்பு நிதியாண்டில் மொத்தவிலை குறியீட்டெண் உயர்ந்த போதெல்லாம் வட்டிவீதமும் இப்படி 9 முறை உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை ரிசர்வ் வங்கியின் சாதனை என்றே கூறலாம்!

சர்வதேசச் சந்தையில் கச்சா பெட்ரோலியத்தின் விலை உயர்ந்தபோதெல்லாம் அரசுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் கடுமையான நஷ்டம் அடைந்து திவாலாகிவிடும் என்பதைப்போன்ற

பிரமையை ஊட்டி விற்பனை விலையை இரவோடு இரவாக உயர்த்த உதவுகிறது அரசு. கடைசியாக லிட்டருக்கு 5 ரூபாய் உயர்த்தியது.

இதனால் பஸ், ரயில், போக்குவரத்துக் கட்டணங்கள் லாரி வாடகை, சரக்குப் போக்குவரத்துக் கட்டணங்கள் அதே வேகத்தில் உயரும் என்பது மத்திய அரசுக்குத் தெரியாததல்ல. இந்தச் சுமையை மக்கள் தாங்கித்தான் ஆக வேண்டும் என்ற முடிவுக்கு அது என்றைக்கோ வந்துவிட்டது.

கோதுமை, அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், சிறு தானியம், சர்க்கரை, பழங்கள், காய்கறிகள் போன்றவற்றின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன. தானியங்களைப் பொறுத்தவரையில் விளைச்சல் குறைவு ஒரு காரணம் என்றாலும் அரசு தன்னுடைய திறந்தவெளிக் கிடங்கிலும் மூடிய கிடங்குகளிலும் உள்ள கையிருப்பை உரிய நேரத்தில் பொது விநியோகத்துக்குத் திறந்துவிடாததும் விலைவாசி உயர முக்கியக் காரணம்.

கடந்த சில ஆண்டுகளாகவே அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பண்டங்களை முன்பேர வர்த்தகம் மூலம் விற்பதால் அவற்றின் விலையும் கணிசமாக உயர்ந்து வருகிறது. உள்நாட்டில் அரிசி, கோதுமை எவ்வளவு தேவைப்படுகிறது, எவ்வளவு விளைந்திருக்கிறது, எவ்வளவு கையிருப்பில் இருக்கிறது, பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதா என்றெல்லாம் கணக்குப் பார்க்க முடியாதபடி இந்த முன்பேர வர்த்தகம் தடுத்துவிடுகிறது. எனவே செயற்கையாகவே விலை ஏற்றப்படுகிறது.

பெட்ரோல், டீசல் விலையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு விதிக்கும் உற்பத்தி (கலால்) வரி, மாநிலங்கள் விதிக்கும் விற்பனை வரி, செஸ், சாலை மேம்பாட்டு வரி போன்றவற்றை விலக்கினால் இப்போதுள்ள நிலையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.33 முதல் ரூ.34 வரையில்தான் ஆகும் என்று பொருளாதார நிபுணர் கே.கே. ஜெயின் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் மக்கள் இதைப்போல இரு மடங்கு விலையைத் தந்து வாங்குகின்றனர்.

மாநில அரசுகள் தங்களுடைய வருவாயைப் பெருக்கித்தரும் காமதேனுவாக பெட்ரோல், டீசலைக் கருதுவதால் அவற்றின் விலை உயரும்போது ஒப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இவ்விரு பண்டங்கள் மீதான வரித் தொகை அவர்களுக்கு வசூலிக்கும் செலவுகூட இல்லாமல் "மடியில் விழுந்த மாங்கனி'யாக எளிதாகக் கிடைத்துவிடுகிறது.

இரு ஆண்டுகளுக்கு முன்னால் உலக அளவில் வங்கிகளில் டெபாசிட்டுகளுக்குக் கிடைக்கும் வட்டி இந்தியாவில் அதிகம் என்பதால் வளர்ந்த நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் குறுகிய காலத்துக்குத் தங்களுடைய நிறுவனங்கள் மூலம் இந்திய வங்கிகளில் முதலீடு செய்யத் தொடங்கினர்.

வங்கிகள் கடன்களுக்கான வட்டி வீதத்தை அதிகரித்தால் பணவீக்க விகிதம் மேலும் அதிகரிக்கும் என்பதே உண்மை. 1990-களில் நம் நாட்டிலேயே வங்கிகள் வசூலித்த வட்டி வீதம் 18% முதல் 20% வரையில்கூட இருந்தன. வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஆட்சிக் காலத்தில்தான் வீட்டுக்கடன் வட்டி கூட கணிசமாகக் குறைக்கப்பட்டது.

வாடிக்கையாளர்களுக்கு தவணைகளைக் குறைக்கவா, வட்டியைக் குறைக்கவா என்று எல்.ஐ.சி. போன்ற அரசுத்துறை நிறுவனங்கள் கடிதம் எழுதி களிப்பில் ஆழ்த்தின. அப்போதுதான் ரியல் எஸ்டேட் துறையும் வளர்ச்சி பெற்றது. வட்டிவீதம் 6% முதல் 7% வரை குறைக்கப்பட்டபோது பணவீக்க விகிதமும் அதே அளவுக்குக் குறைந்தது. அந்தப் பாடங்களை மறந்துவிட்டு வட்டி வீதத்தை மட்டும் அதிகப்படுத்துவதால் பயன் இல்லை என்பதை ரிசர்வ் வங்கி ஆழ்ந்து பரிசீலித்தால் நல்லது.

விலைவாசியைக் கட்டுப்படுத்த தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய புத்திசாலித்தனமான நடவடிக்கைகள்தான் தேவையே தவிர, சுலப வழிகள் எந்தப் பயனும் அளித்துவிடாது. இது நிதியமைச்சகத்துக்கும் ரிசர்வ் வங்கிக்கும் தெரியாதா என்ன?

**பூக்கள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

First Published : 26 May 2011 10:50:59 AM IST

திருத்தணி, மே 25: திருத்தணி பகுதியில் அண்மைக்காலமாக பூக்கள் பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வேலஞ்சேரி, முருகம்பட்டு, பொன்பாடி, தாழவேடு, சத்திரஞ்ஜெயபுரம், நாணமங்கலம், பெருங்களத்தூர், கீழாந்தூர் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. விவசாய கிராமங்களான இப்பகுதியில் தங்கள் நீர்ப்பாசன நிலங்களில் கரும்பு, நெல், வேர்க்கடலை, உளுந்து, துவரம், பருத்தி உள்ளிட்ட பல்வேறு பயிர்களையே விவசாயிகள் அதிக அளவில் பயிர் செய்து வந்தனர்.

அண்மைகாலமாகவே மின்சாரப் பற்றாக்குறை நிலவி வருவதாலும், உரம் விலை உயர்வு, கூலியாட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு உள்ளிட்டவைகளால் விவசாயிகள் தவித்து வருகின்றனர். மேலும் மகசூலுக்கு நிச்சயமற்ற விலை என்ற நிலை இருப்பதால் இப்பகுதி விவசாயிகள் மாற்றுப் பயிர்களை நாடும் நிலை வந்தது. அதன்படி அதிக செலவு, சிரமம் இல்லாத காரணத்தால் இப்பகுதி விவசாயிகள் தற்போது பூக்கள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரை ஏக்கர் முதல் ஒரு ஏக்கர் வரை சம்பங்கி, ரோஸ், மல்லிகை, முல்லை, கோழிக் கொண்டை, சாமந்தி, டில்லி கனகாம்பரம் உள்ளிட்ட பயிர்களை பயிரிடும் விவசாயிகள், பறிக்கும் பூக்களை திருத்தணி, திருவள்ளூர், சென்னை, அரக்கோணம் ஆகிய ஊர்களில் உள்ள பூ மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி சில்லறை விலையிலும், மொத்த விலைக்கும் விற்று வருகின்றனர்.

பூக்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதால் குறைந்த உழைப்பில் நிறைந்த லாபத்தை விவசாயிகள் பெருவதால் விவசாயிகளுக்கு பூக்களை பயிரிடுவதில் ஆர்வம் அதிகரித்துள்ளது.

**நாற்றங்கால் வளர்ப்பு பயிற்சி முகாம்**

First Published : 26 May 2011 11:12:04 AM IST

பெரியகுளம், மே 25:÷மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் பெரியகுளம் தங்கம்-முத்து பாலிடெக்னிக்கில் செயல்பட்டுவரும் சமுதாய மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் சொசைட்டி தொண்டு நிறுவனம் ஆகியவை சார்பில் நாற்றங்கால் வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப பயிற்சி முகாம் பெரியகுளத்தில் நடைபெற்றது.

÷பாலிடெக்னிக் சமுதாய மேம்பாட்டுத் திட்ட ஆலோசகர் ஆர். சேகர் வரவேற்றார். கம்யூனிட்டி டெவலப்மெண்ட் சொசைட்டி தொண்டு நிறுவனத் தலைவர் என். வேல் முருகன், செயலர் எம். கற்பகவள்ளி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

÷ஆண்டிபட்டி பாரதி நர்சரி கார்டன் நிறுவனர் கே. பாலமுருகன் நாற்றங்கால் வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளித்தார்.

தினமலர்

**பயிரிடும் பரப்பு அதிகரித்து வருவதால்கரும்பு விளைச்சல் 38 கோடி டன்னாக உயரும்**

மே 27,2011,00:08



புதுடில்லி: கரும்பிற்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் அதனை பயிரிட்டு வருகின்றனர். இதனால் வரும் கரும்பு பருவத்தில், கரும்பு பயிரிடும் பரப்பு 8 முதல் 10 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு 2010-11ம் கரும்பு பருவத்தில், நாட்டில் 40 லட்சத்து 96 ஆயிரம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டது. நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில் உத்தரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரு மாநிலங்களின் பங்களிப்பு 80 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.

கரும்பு விளைச்சல் நன்கு உள்ளதாலும், நல்ல விலை கிடைப்பதாலும், விவசாயிகள் அதிக பரப்பில் கரும்பை பயிரிட தொடங்கியுள்ளனர்.இதனால் மகாராஷ்ட்ராவிலும், உத்தரபிரதேசத்திலும் கரும்பு பயிரிடும் பரப்பு முறை@ய 5 மற்றும் 10 சதவீதமாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, வரும் 2011-12ம் கரும்பு பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) கரும்பு உற்பத்தி 38 @காடி டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது, நடப்பு 2010-11 செப்டம்பருடன் முடியும் கரும்பு பருவத்தில், 34.60 @காடி டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.மத்திய @வளாண் அமைச்சம் வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி, சென்ற வாரம் வரை, நாட்டில் 50 லட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.இது, சென்ற ஆண்டின், இ@த காலத்தில் பயிரிடப்பட்ட பரப்பை விட 7.25 சதவீதம் அதிகமாகும். மகாõராஷ்டிரா மாநிலத்தில், சென்ற ஆண்டை விட 2.24 சதவீதம், அதாவது, 9.10 லட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. நாட்டில், கரும்பு விளைச்சலில் 2ம் இடத்தில் உள்ள உத்தரப்பிரதேச மாநிலத்தில், சென்ற ஆண்டை விட 9 சதவீதம் கூடுதலாக, அதாவது, 20 லட்சத்து 31 எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.தமிழகத்தில் கடந்த வார நிலவரப்படி 2 லட்சத்து 25 ஆயிரம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இது, வரும் 2011-12ம் கரும்பு பருவத்தில் 2 லட்சத்து 86 ஆயிரம் எக்@டராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டில் கரும்பு பயிரிடும் பரப்பும்,விளைச்சலும் அதிகரிக்கும் என்பதால், கரும்புச் சக்கையில் இருந்து தயாரிக்கப்படும் மொலாசஸ் உற்பத்தி 10 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எரிசாராயம், ரசாயனம், எரிபொருள் தொழிற்சாலைகளில் மொலாசஸ் பயன்படுத்தப்படுகிறது.கரும்பு விளைச்சல் அதிகரிக்கும் என்பதால், சர்க்கரை உற்பத்தியும் பெருகி, ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கும் என்று இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர். அடுத்த ஆண்டு சர்வதேச அளவில் சர்க்கரை உபரி 60 லட்சம் டன்னாக இருக்கும் என, சர்வதேச சர்க்கரை கழகம் மதிப்பிட்டுள்ளது.நடப்பு 2010-11ம் கரும்பு பருவத்தில், நாட்டின், சர்க்கரை உற்பத்தி 2.42 @காடி டன் முதல் 2.45 @காடி டன் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.இது வரும் 2011-12ம் கரும்பு பருவத்தில் 2.65கோடி டன்னாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில், சர்க்கரை பயன்பாடு ஆண்டிற்கு 2.20 @காடி டன் முதல் 2.30 @காடி டன் வரை உள்ளது. சென்ற 2010-11ம் நிதியாண்டில், பொது உரிமத்தின் கீழ் 4 லட்சத்து 50 ஆயிரம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கி இருந்தது.அதில் 2 லட்சத்து 53ஆயிரம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகள், எஞ்சிய சர்க்கரையை ஏற்றுமதி செய்வதற்கு

அளிக்கப்பட்ட கால அவகாசம், 15 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில், சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி கோரி, மத்திய அரசிடம் விண்ணப்பிக்க, சர்க்கரை ஆலை உற்பத்தியாளர் களுக்கு கூடுதலாக 15 நாட்கள் வழங்கப்பட்டுள்ளன.

**உணவு பொருள் பணவீக்கம் 8.55 சதவீதமாக அதிகரிப்பு**

மே 27,2011,00:07



புதுடில்லி: நாட்டின் உணவு பொருள் பணவீக்கம், மே 14ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 8.55 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 7.47 சதவீதமாக குறைந்திருந்தது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் மதிப்பிடப்படும் உணவுப் பொருள் பணவீக்கம், கடந்த நான்கு வாரங்களில் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. உணவு தானியங்கள், பழங்கள், புரதச்சத்து சார்ந்த பொருள்களின் விலை அதிகரித்துள்ளதை அடுத்து, பணவீக்கம் உயர்வடைந்துள்ளது.கணக்கீடு செய்வதற்கு எடுத்து கொள்ளப்பட்ட வாரத்தில், உணவு தானியங்கள், சென்ற ஆண்டின் இதே வாரத்தை விட, 5.03 சதவீதம் அதிகரித்துள்ளது. வெங்காயம் 8.32 சதவீதமும், பழங்கள் விலை 32.37 சதவீதமும், பால் விலை 5.53 சதவீதமும், முட்டை, இறைச்சி மற்றும் மீன் ஆகியவற்றின் விலை 8.26 சதவீதமும் அதிகரித்துள்ளது. இது தவிர, அரிசி விலை 2.63 சதவீதமும், உருளைக்கிழங்கின் விலை 0.17 சதவீதமும் உயர்வடைந்துள்ளது.எனினும் ஆண்டுக்கணக்கின் அடிப்படையில், காய்கறிகள் விலை 1.46

சதவீதமும், பருப்பு வகைகள் விலை 9.49 சதவீதமும் மற்றும் கோதுமை விலை 0.30 சதவீதமும் சரிவடைந்துள்ளது.ஆண்டுக்கணக்கீட்டின் அடிப்படையில், முக்கிய உணவு பொருள்களின் பணவீக்கம் 11.60 சதவீதமாக உள்ளது. இது தவிர, உணவு சாராத பொருள்களின் விலை 23.22 சதவீதம் அதிகரித்துள்ளது. இதில், நூலிழை விலை 61 சதவீதமும், தாதுப் பொருள்கள் விலை 11.78 சதவீதமும்உயர்ந்துள்ளது.சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருவதால், வரும் மாதங்களில், உணவு சாராத பொருள்களின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக, மத்திய அர" மற்றும் ரிசர்வ் வங்கி ஆகியவை கருத்து தெரிவித்துள்ளன.

**தக்காளி விலை மீண்டும் உயர்வு**

பதிவு செய்த நாள் : மே 27,2011,00:30 IST

கோயம்பேடு : கோயம்பேடு மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து குறைந்துள்ளதால், சென்னையில் கடந்த சில நாட்களாக குறைந்திருந்த தக்காளி விலை மீண்டும் உயரத்துவங்கியுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு தமிழகத்தின் கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய இடங்களில் இருந்தும், கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்தும் தக்காளி விற்பனைக்கு வருகிறது. கோயம்பேடு மார்க்கெட்டிற்கு, தற்போது 50 முதல் 60 லாரிகள் வரையே தக்காளி வரத்துள்ளது. வரத்து குறைந்துள்ளதால், அவற்றின் விலையும் மீண்டும் உயரத்துவங்கியுள்ளது. தற்போதைய நிலவரப்படி கோயம் பேடு மார்க்கெட்டில், ஒரு கிலோ முதல் தர தக்காளி எட்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மற்ற மார்க்கெட்டுகளில், ஒரு கிலோ முதல் தர தக்காளி 15 ரூபாய்க்கும், அதற்கு அடுத்த தரம் கொண்ட தக்காளிகள், 8 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. அடுத்த மாதம் வரத்து மேலும் குறையும் என்பதால், தக்காளி விலை அதிகரிப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் தெரிவித்தனர். தக்காளி விலை மீண்டும் உயரத்துவங்கியுள்ளது, பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**வெற்றிலை விவசாயிகளுக்கு தனி நலவாரியம்: கூட்டத்தில் தீர்மானம்**

பதிவு செய்த நாள் : மே 27,2011,02:17 IST

ப.வேலூர்: "வெற்றிலை விவசாயிகளுக்கு, அரசு தனி நலவாரியம் அமைக்க வேண்டும்' என, ப.வேலூரில் நடந்த தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ப.வேலூர் நகர வர்த்தக சங்க திருமண மண்டபத்தில், தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்க, 34ம் ஆண்டு பேரவைக் கூட்டம் நடந்தது. சங்க வக்கீல் நடராஜன்

தலைமை வகித்தார். சங்க செயலாளர் வையாபுரி ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் நடேசன் வரவு, செலவுக் கணக்கை வாசித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விபரம்: வெற்றிலை விவசாயிகளுக்கு அரசு தனி நலவாரியம் அமைக்க வேண்டும். வெற்றிலை விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் கடன் பெற வசதி செய்ய வேண்டும். கோவையில் இயங்கும் வெற்றிலை ஆராய்ச்சி பண்ணையை, ப.வேலூரில் அமைக்க வேண்டும்.

ராஜ வாய்க்காலில் கழிவு கலக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வெற்றிலை விவசாயிகளுக்கு பயிர்காப்பீடு திட்டம் அமல்படுத்த வேண்டும். உரத்தட்டுப்பாட்டை போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, 50 பேர் கொண்ட பேரவைக் குழு, 15 பேர் கொண்ட நிர்வாகக் குழு, 3 பேர் கொண்ட விலைக்குழு, 5 பேர் கொண்ட தணிக்கைக் குழு தேர்வு செய்யப்பட்டது. தலைவராக நடராஜன், செயலாளராக வையாபுரி, பொருளாளராக நடேசன், துணைத் தலைவர்களாக மாணிக்கம், ராசப்பன், துணைச் செயலாளர்களாக நடேசன், பரமசிவம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கொப்பரை தேங்காய் விலை ஒரே மாதத்தில் ரூ.7 வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 27,2011,02:04 IST

கோபிசெட்டிபாளையம்: கொப்பரை தேங்காய் தொடர்ந்து விலை வீழ்ச்சியடைவதால் தென்னை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நடப்பு மாதத்தில் கிலோவுக்கு ஏழு ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணை பாசனம், பெரும்பள்ளம் அணை பாசனம் ஆகிய பகுதிகளில் நெல் அதிகளவில் பயிரிடப்படுகிறது. நெல்லுக்கு அடுத்தப்படியாக கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் பயிர்கள் சாகுபடி நடக்கிறது. மூன்று ஆண்டுகளாக விவசாயக் கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக, தோட்டக்கலை பயிர்களான காய்கறிகளை விவசாயிகள் பயிரிடத் துவங்கினர். கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, பாகற்காய், காலிஃபிளவர், புடலை, சிறிய வெங்காயம், பூசணி வகைகள், முள்ளங்கி, கீரை வகைகள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகிறது. பயிர் வகைகளுக்கு அடுத்தபடியாக தென்னை அதிகளவில் வளர்க்கப்படுகிறது. தேங்காய் அறுவடையாகி, கொப்பரையாக மாற்றப்படுகிறது. கோபி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு மே முதல் வாரம் 230 மூட்டை தேங்காய் வரத்தானது. ஒரு கிலோ 68.27 முதல் 72.29 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இரண்டாவது வாம் 128 மூட்டை வரத்தானது. 69.59 முதல் 71.05 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு வாரம் 194 மூட்டை

கொண்டு வரப்பட்டது. 62.06 முதல் 65.25 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கொப்பரை விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரே மாதத்தில் கிலோவுக்கு 7.04 ரூபாய் வரை சரிந்துள்ளது. கொப்பரை விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னை விவசாயி ஒருவர் கூறியதாவது: கேரளாவில் தேங்காய் சீஸன் என்பதால், தமிழகத்தில் இருந்து தேங்காய் எண்ணெய் அனுப்புவது குறைந்து விட்டது. இதனாலேயே, கொப்பரை விலை வீழ்ச்சியடைகிறது. நடப்பு மாதத்தில் கொப்பரை கிலோவுக்கு ஏழு ரூபாய் குறைந்ததால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. கேரளாவில் ஜூன் மாதம் மழை சீஸன் துவங்கும் என்பதால், தமிழகத்தில் இருந்து எண்ணெய் அனுப்புவது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி புத்தாக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 27,2011,02:09 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் கணக்கப் பிள்ளையூர் கிராமியம் தொண்டு நிறுவன வளாகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில், காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தொழில் நுட்ப புத்தாக்க பயிற்சி முகாம் நடந்தது. முகாமை கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார்.

முகாமில், தோட்டக்கலை உதவி அலுவலர் நசீர் மண் மாதிரி எடுக்கும் முறைகள், தென்னை நலவாரியத்தில் உறுப்பினராக சேர்வது, சொட்டுநீர்பாசனம் அமைப்பது உள்ளிட்ட பயன்கள் குறித்தும், உதவி வேளாண் அலுவலர் மூக்கையன், தென்னைக்கு உருமிடுதல் தென்னையில் பயிர்பாதுகாப்பு செய்வது குறித்தும், குளித்தலை உழவர் சந்தை நிர்வாக அலுவலர் அபுபக்கர், வேளாண்மை விற்பனைக்துறை செயல்பாடு குறித்தும், உழவர் சந்தை மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகை மற்றும் பயன்கள் குறித்தும் விளக்கி கூறினர்.

பயிற்சியில் புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் நிலைய தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர் தனசேகரன், கிராமியம் தொண்டு நிறுவன இயக்குநர் நாராயணன், தனி உதவி வேளாண் அலுவலர் நரசிம்ம மூர்த்தி உள்பட பலர் பங்கேற்றனர். பயிற்சியில் பங்கேற்ற 50க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு பயிற்சி: தோட்டக்கலை ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : மே 27,2011,02:18 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தமிழ்நாடு நிலநீர்வள நிலவளத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி நேற்று அளிக்கப்பட்டது. பெரம்பலூர் யூனியன் அலுவலகத்தில் நடந்த பயிற்சிக்கு மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் சவுந்தரராஜன் தலைமை வகித்தார். மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்) ராஜராஜசோழன் முன்னிலை வகித்தார்.
முகாமில் தோட்டக்கலை துணை இயக்குநர் சவுந்தரராஜன் பேசியதாவது: தென்னை சாகுபடி குறித்தும், பழப்பயிர்களான மா, நெல்லி, திசு, நறுமனப்பயிர்களான மிளகாய், மஞ்சள், காய்கறிப்பயிர் தக்காளி ஆகியவற்றை சாகுபடி செய்வதால் அரசு வழங்கும் மானியத்தொகை குறித்து விளக்கி கூறினார். வேளாண் செயற்பொறியாளர் மணி சொட்டுநீர், தெளிப்பு நீர்பாசனம் குறித்தும், வேளாண் துணை இயக்குநர் சிவசங்கரன் உற்பத்தியாளர் குழு அமைத்தல் குறித்தும், கால்நடை உதவி மருத்துவர் மூக்கன் செயற்கை கருவூட்டல் குறித்தும் பேசினர்.
தோட்டக்கலை உதவி இயக்குநர் இந்திரா திட்ட விளக்கவுரையாற்றினார். இதில் பெரம்பலுர் மாவட்டத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். முன்னதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் தாகூர் வரவேற்றார்.
உதவி இயக்குநர் ஆனந்தன் நன்றி கூறினார்.

**இறால் வளர்ப்போருக்கு மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : மே 27,2011,02:37 IST

தஞ்சாவூர்: மாவட்டத்தில் சிறு இறால் வளர்ப்போருக்கு கோடியே 72 லட்சத்து 28 ஆயிரத்து 600 ரூபாய் மதிப்பிலான மானிய தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.
தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம், கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது. இலவச வீட்டுமனை பட்டா, கல்விக்கடன், முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனு கலெக்டரிடம் அளிக்கப்பட்டது. மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டது.
சிறு இறால் வளர்க்கும் பயனாளிகளுக்கு மத்திய, மாநில அரசு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு 76 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பிம், திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு 39 லட்சத்து 25 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்பிலும், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு 24 லட்சத்து 2,400 ரூபாய் மதிப்பிலும், நாகை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு 32 லட்சத்து 14 ஆயிரத்து 400 ரூபாய் மதிப்பிலுமாக மொத்தம்

156 பயனாளிகளுக்கு 1 கோடியே 72 லட்சத்து 28 ஆயிரத்து 600 ரூபாய் மதிப்பிலான மானிய தொகைக்கான காசோலைகளை, தஞ்சாவூர் மாவட்ட உவர்நீர், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை தலைவர் மற்றும் கலெக்டர் சண்முகம் வழங்கினர்.
திருவையாறு தாலுகா, அகரப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ப்ளஸ் 2 தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றதற்கு பள்ளி தலைமையாசிரியர் மலைச்சாமி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ராதாவுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், ஆதிதிராவிட நல அலுவலர் ஜேம்ஸ் செல்லையா, தேர்தல் தாசில்தார் பானுகோபன் பங்கேற்றனர்.

**நெட்டை தென்னங்கன்று விற்பனை: தோட்டக்கலை அதிகாரி அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : மே 27,2011,02:35 IST

தஞ்சாவூர்: "நெட்டை தென்னங்கன்று தஞ்சை மாவட்டத்தில் விற்பனைக்கு வந்துள்ளது' என தோட்டக்கலை துணை இயக்குனர் செல்வராஜ் அறிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தென்னை மரத்தில் தேங்காய், இளநீர், பாளை, மட்டை, மரம் போன்ற அனைத்து பகுதிகளுக்கும் பயன் தருவதால், இது ஒரு கற்பக விருட்சம் என அழைக்கப்படுகிறது.
தஞ்சை மாவட்டத்தில் 25 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக இப்பயிர் பட்டுக்கோட்டை, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், ஒரத்தநாடு வட்டாரங்காளில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தேங்காய் பால் எக்ஸிமா என்ற கொடிய நோய்க்கு சிறந்த மருந்து. இளநீர் காலரா, மஞ்சள் காமாலை, மலட்டுத்தன்மை க்கு சிறந்த மருந்தாக அமைகிறது.
தென்னை சாகுபடி செய்ய நல்ல வடிகால் வசதி வேண்டும். நடவு மேற்கொள்ள குழி வெட்டி, தொழுஉரம், செம்மண், மணல் சம அளவில் கலந்து ஒரு அடி உயரத்துக்கு நிரப்ப வேண்டும். கரையான் தாக்காமல் இருக்க ஒரு குழிக்கு 250 கிராம் லிண்டேன் தூள் குருணை மருந்தை இடுதல் அவசியமாகும். ஒரு எக்டர் பரப்பளவுக்கு 175 தென்னங்கன்று தேவைப்படும்.
முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஊடு பயிராக மஞ்சள், காய்கறி பயிரிடலாம். நடப்பாண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருங்குளம் மற்றும் ஆடுதுறை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் நெட்டை தென்னங்கன்று உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு உள்ளது. தரமான நெட்டை தென்னங்கன்று ஒன்றில் விலை 15 ரூபாயாகும். மாவட்ட விவசாயிகள் மருங்குளம் மற்றும் ஆடுதுறை, தோட்டக்கலை பண்ணைகளில் இருந்து தென்னங்கன்றுகளை வாங்கி பயன்பெற வேண்டும்.

விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் தென்னங்கன்று விபரத்தை மூன்கூட்டியே சம்மந்தப்பட்ட பண்ணை மேலாளர்களுக்கு தெரிவித்து காலதாமதத்தை தவிர்க்க வேண்டும்.

**ஆப்பிள் கிலோ 160 ரூபாய் : மாம்பழம் விலை மலிவு**

பதிவு செய்த நாள் : மே 26,2011,22:57 IST

சிவகங்கை : சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி விலை நிலவரம் (கிலோ): 20 க்கு விற்ற வெண்டைக்காய் -24; 20க்கு விற்ற பாகற்காய்-24; முருங்கை பீன்ஸ்-35; கேரட்-30; 10 க்கு விற்ற முள்ளங்கி-16; 15 க்கு விற்ற கத்தரிக்காய்-10; உருளைக் கிழங்கு-15; முட்டை கோஸ்- 10; தக்காளி -10; கருணை கிழங்கு- 40; இஞ்சி- 40; இரண்டாவது ரகம் -30; 24க்கு விற்ற அவரைக்காய்- 30; பட்டர் பீன்ஸ்-80; வெங்காயம்- 25; 10 க்கு விற்ற பெல்லாரி வெங்காயம்- 15; காலிபிளவர்- 15; 10 க்கு விற்ற மாங்காய்-20; சேணை கிழங்கு- 30; சேம்பு- 30; பச்சை மிளகாய்- 16; 10 க்கு விற்ற பீட்ரூட்- 15; 20 க்கு விற்ற நூக்கல்-30; சோயா பீன்ஸ்- 60; 25க்கு விற்ற எலுமிச்சை- 40; பீர்க்கை- 20; டர்னிப்- 30; சீனி அவரை- 10; 15க்கு விற்ற சவ்சவ் -20; 30 க்கு விற்ற மல்லிஇலை- 25; கருவேப்பிலை- 20; பூசணி- 20 ரூபாய்க்கு விற்றன. பழங்கள்: மாதுளம் பழம்- 100; அதில் 2 வது ரகம் -90; 140க்கு விற்ற ஆப்பிள்-160;
2 வது ரகம் -140; ஆந்திர ஆரஞ்சு- 70; கொடைக்கானல் ஆரஞ்சு -60; சாத்துக்குடி-70; திராட்சை (வெள்ளை) -100; மஸ்கட் (கருப்பு) -120; கருப்பு (பன்னீர்) -40; அன்னாசி பழம்- 30; சப்போட்டா - 20; 30க்கு விற்ற பாலாமணி மாம்பழம்- 20; 50க்கு விற்ற சப்பட்டை மாம்பழம்-40; 25க்கு விற்ற கல்லாமை மாம்பழம்-20 ரூபாய்க்கு விற்றது. மாம்பழம் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பால் பவுடர்,நெய் தேவைக்காக காரைக்குடி பால் மதுரை பயணம்**

பதிவு செய்த நாள் : மே 26,2011,22:57 IST

காரைக்குடி : உற்பத்தி அதிகரிப்பால், ஆவின் பால்,பவுடர், நெய் தயாரிக்க காரைக்குடியில் இருந்து மதுரை ஆவினுக்கு கொண்டு செல்லப்படுகிறது. காரைக்குடி ஆவின் மூலம் சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டத்தில் 32 பூத்கள் மூலம் தினமும் 34 ஆயிரம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு லிட்டர் பால் 25 ரூபாய்க்கு விற்கிறது. கடந்த மாதம் கோடை வெயில் வெப்பத்தால், பசுக்களுக்கு உரிய தீவனம் இன்றி பால் உற்பத்தி குறைந்தது. இதனால் வாடிக்கையாளர்களுக்கு கூட பால் வழங்க முடியாத நிலை இருந்தது. தட்டுப்பாடு காரணமாக ஆவின் மூலம் தயாராகும் இதர பொருட்களான பால் பவுடர், நெய் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

* தாராளம்:கடந்த மாதம்(ஏப்., ) 22,500 லிட்டர் பால் உற்பத்தியானது. தற்போது ( மே.,மாதம் ) 35,000 லிட்டர் வரை உயர்ந்துள்ளது.தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் 10,000 லிட்டர் பால் இதர தேவைகளுக்காக மதுரை உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு வாரத்திற்கு இருமுறை காரைக்குடி ஆவின் பாலகம் மூலம் அனுப்பப்படுகிறது.

* ஆவின், விற்பனை பிரிவு மேலாளர் முகாநிதி கூறுகையில், "" கோடை வெயிலால் சில மாதங்கள் பால் உற்பத்திரியில் சரிவு ஏற்பட்டது. தற்போது 35,000 லிட்டர் பால் வரை உற்பத்தி செய்யப்படுகிறது. இது போதுமானதாக உள்ளது. தேவைக்கு அதிகமான பால் (10,000 லிட்டர்) பால்பவுடர், நெய் உள்ளிட்ட இதர பொருட்கள் தயாரிக்க மதுரை உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. இனிவரும் காலங்களில் தட்டுப்பாடின்றி பால் கிடைப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்" என்றார்.

## ***நான்கு வாரங்களில் இல்லாத அளவிற்கு உணவு பொருள் பணவீக்கம் 8.55 சதவீதமாக உயர்வு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உணவு பொருள் பணவீக்கம், மே 14–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், கடந்த நான்கு வாரங்களில் இல்லாத அளவிற்கு 8.55 சதவீதமாக உயர்ந்துள்ளது. பழங்கள், உணவு தானியங்கள், அசைவ உணவு பொருள்கள் விலை உயர்வே இதற்கு காரணமாகும்.*

*பெட்ரோல் விலை*

*தொடர்ந்து மூன்று வாரங்களாக உணவு பணவீக்கம் குறைந்து வந்தது. முந்தைய வாரத்தில் இது 7.47 சதவீதமாக இருந்தது. தற்போது 1.08 சதவீதம் அதிகரித்து 8.55 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

*பொதுத் துறை நிறுவனங்கள் இம்மாதம் 14–ந் தேதி அன்று ஒரு லிட்டர் பெட்ரோல் விலையை ரூ.5 உயர்த்தியது. இதன் தாக்கத்தால் மே 21–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் என்ற அச்சப்பாடு நிலவுகிறது.*

எனவே, பாரத ரிசர்வ் வங்கி வரும் ஜூன் மாதம் வெளியிடும் இடைநிலை கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓராண்டு கால அடிப்படையில் பழங்கள் விலை 32.37 சதவீதமும், பால் விலை 5.53 சதவீதமும் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 8.26 சதவீதம் அதிகரித்துள்ளது. அரிசி விலை 2.63 சதவீதம் அதிகரித்ததையடுத்து, தானியங்கள் விலை 5.03 சதவீதம் உயர்ந்துள்ளது. வெங்காயம் விலை 8.32 சதவீதமும், உருளைக்கிழங்கு விலை 0.17 சதவீதமும் அதிகரித்துள்ளது.

காய்கறி – பருப்பு

அதேசமயம், காய்கறி, பருப்பு வகைகள் ஆகியவற்றின் விலை முறையே 1.46 சதவீதம் மற்றும் 9.49 சதவீதம் குறைந்துள்ளது. கோதுமை விலை 0.30 சதவீதம் குறைந்துள்ளது. அவ்வாரத்தில், உணவு சாரா பொருள் பணவீக்கம் 23.22 சதவீதமாக உள்ளது.

## கோடை சீசனை முன்னிட்டு குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நாளை பழக்கண்காட்சி அமைச்சர் செங்கோட்டையன் தொடங்கி வைக்கிறார்

குன்னூர், மே.27–

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நாளை(சனிக்கிழமை) பழக்கண்காட்சி தொடங்குகிறது. இதனை வேளாண்மை துறை அமைச்சர் செங்கோட்டையன் தொடங்கி வைக்கிறார்.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி

நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள சிம்ஸ் பூங்காவில் ஆண்டுதோறும் கோடை சீசனை முன்னிட்டு பழக்கண்காட்சி மே மாதம் கடைசி வாரத்தில் 2 நாட்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கோடை சீசனுக்காக சிம்ஸ் பூங்காவில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன. இந்த செடிகள் அனைத்தும் தற்போது பூத்து குலுங்குகிறது.

இந்த ஆண்டு கோடை சீசனின் இறுதி நிகழ்ச்சியாக குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 53–வது பழக்கண் காட்சி நாளை(சனிக்கிழமை) காலை தொடங்குகிறது. கண்காட்சியை நாளை காலை 9 மணிக்கு வேளாண்மை துறை அமைச்சர் செங்கோட்டையன் தொடங்கி வைக்கிறார். நிகழ்ச்சிக்கு சுற்றுலா துறை அமைச்சர் புத்திசந்திரன், தோட்டக் கலை துறை கமிஷனர் சந்திரமோகன், நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

குன்னூர் ரெயில் நிலைய கட்டிடம்

கண்காட்சியையொட்டி இந்த ஆண்டு நுழைவு வாயிலில் முதல் முறையாக பாரம்பரிய சின்னமான மலை ரெயிலை நினைவூட்டும் விதமாக குன்னூர் ரெயில் நிலைய கட்டிடம் சுமார் 3 டன் எடை கொண்ட 15 ஆயிரம் சாத்துக்குடி பழங்களால் அமைக்கப்படுகிறது.

மேலும் 53–வது பழக்கண்காட்சியை நினைவு கூறும் வகையில், 53 பழவகைகள் கண்காட்சியில் இடம் பெறுகிறது. கண்காட்சியில் முதல் முறையாக நீலகிரி மாவட்டம் மட்டுமின்றி கோவை உள்பட 10 மாவட்டங்களை சேர்ந்த தோட்டக்கலை துறையினரால் அரங்குகள் அமைக்கப்பட உள்ளது. மேலும் அரசு மற்றும் தனியார் துறைகள் சார்பில் அரங்குகள் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நிறைவு விழா

பழக்கண்காட்சி நிறைவு விழா வருகிற 29–ந் தேதி(ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணிக்கு நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமை தாங்குகிறார். சுற்றுலா துறை அமைச்சர் புத்திசந்திரன் பழக்கண்காட்சி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கு கிறார்.

தோட்டக்கலை துறை கமிஷனர் சந்திரமோகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். முன்னதாக தோட்டக்கலை துறை இணை இயக்குனர்(பொறுப்பு) ஜோ.ஹால் தொரை வரவேற்று பேசுகிறார். முடிவில் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மணி நன்றி கூறுகிறார்.

தினகரன்

**விவசாயிகளுக்கு மண் சுகாதார அட்டை**

பதிவு செய்த நாள் 5/27/2011 12:58:02 AM



சண்டிகர்: அனைத்து விவசாயிகளுக்கும் 2012 மார்ச் 31ம் தேதிக்குள் மண் சுகாதார அட்டை வழங்கப்படும் என ஹரியானா அரசு அறிவித்துள்ளது. மொத்தம் உள்ள 15.26 லட்சம் விவசாயிகளில் 10 லட்சம் பேருக்கு ஏற்கனவே இதுபோன்ற அட்டை வழங்கப்பட்டுள்ளதாக அரசு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் நிலத்தில் உள்ள மண் மாதிரியை எடுத்து, அதில் உள்ள தாதுப் பொருட்களின் அளவை ஆய்வகங்களில் பரிசோதனை செய்து அதன் விவரங்களை ஒரு அட்டையில் குறித்து தரப்படுகிறது. பயிரிட விரும்பும் பயிருக்கு தேவையான உரங்களை சரியாக தேர்ந்தெடுக்க இந்த அட்டை உதவுகிறது. இந்த திட்டத்தை செயல்படுத்த பல்வேறு மாநிலங்களும் ஹரியானாவை அணுகி வருகின்றனர்.